**செய்தி வெளியீடு எண்:332** **நாள் : 08.7.2016**

## <u>சிப்காட் வானூர்திப் பூங்கா, 8.7.2016 அன்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு.</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர்/தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் டிட்கோ மற்றும் தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர்/தலைவர்(ம)மேலாண்மை இயக்குநர், சிப்காட் ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் பகுதியில் வானூர்தி பூங்காஅமையப்பெறவுள்ள பகுதியினை இன்று (08.07.2016) நேரில் ஆய்வு செய்தனர்.

இவ்வானூர்தி பூங்கா, சிப்காட் திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா மற்றும் ஒரகடம் தொழில் பூங்காவிற்கு இடைப்பட்ட பகுதியில் சுமார் 1,780 ஏக்கரில் அமைந்துள்ள சிப்காட் வல்லம்–வடகால் பூங்காவில் அமைய உள்ளது. இப்பூங்கா வானூர்திகளுக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு 245 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 200 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் தொடர்ச்சியாக வானூர்தி தொழில்களுக்கான மேம்படுத்தப்பட்ட கணினி மற்றும் தொழில்நுட்ப மையம் அமைய உள்ளது.

இப்பூங்காவில், ஐந்தாண்டுகளில் ரூ.1000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு சுமார் 10,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் 25,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். இது வரை, இப்பூங்காவில் 34 ஏக்கர் நிலம் 11 தொழில் நிறுவனங்களுக்கு சிப்காட் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கும் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன. மேலும், சிப்காட் நிறுவனம் மூலம் ரூ10.8 கோடி செலவில் அமையபெற்றுள்ள சரக்கு வண்டிகள் முனையத்தையும், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் ஆய்வு செய்தார். இம்முனையத்தில் கனரக வாகன ஊர்திகள் நிறுத்துமிடம், உணவகம், பொது தங்கும் அறைகள், கழிவறை வசதி மற்றும் பாதுகாவலர் அறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**